# ஔவையாரின் தனிப்பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள்

**இரா.கோகிலவாணி &** முனைவர் மு. வையாபுரி
[1]முழுநேர முனைவர் பட்ட **ஆய்வாளர்**
[2]உதவிப் பேராசிரியர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம்,சென்னை – 15
kkkohila@yahoo.co.in

1

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனின் சிந்தனை என்பது உயிர்களுக்கு அளிக்கப்பட்ட அறிவின் நீட்சி ஆகும். இவ்வாறு அடைந்த சிந்தனையை மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பெருக்கிக் கொண்டே வந்தான். அங்ஙனம் வளர்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடாக மனிதன் படைத்ததே மொழியும், இலக்கியங்களும் ஆகும். அதுவும் தமிழ்மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்கள், மனிதனின் வாழ்வியல் சிந்தனைகளின் மெருகேற்றப்பட்ட தொகுப்பு எனலாம். அவை தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்வினையும், வாழ வேண்டிய வாழ்வின் முறைமைகளையும் எடுத்துக் கூறுகின்றன. இங்ஙனம் மக்கள் வாழ வேண்டிய வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் கூறிய பல்வேறு தமிழ்ப் புலவர்களில் பெண்பாற் புலவர்களும் இருந்தனர். இந்தப் பெண்பாற் புலவர்களுள் எவராலும் தவிர்க்க இயலாதவர் ஔவையார் ஆவார். *'ஔவை என்பது பொதுப்பெயர். ஔவை என்னும் பெயரில் பலர் வாழ்ந்தனர்'* என்றொரு கருத்தும் தமிழ் கூறும் நல்லுலகில் உண்டு. இவர்களுள் *'தனிப்பாடல்களை எழுதிய ஔவையின் '* பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள் மிகுந்து இருந்தன என்பதை சான்றுப் பாடல்களுடன் விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கடவுச் சொற்கள்:** ஔவையார், பெண்பாற் புலவர், தனிப்பாடல்கள், வாழ்வியல் சிந்தனைகள்.

**முன்னுரை**

உலகம் தோன்றிய நாள் முதலாக பல்லுயிர்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன. ஓரறிவு உயிர்கள் ஒவ்வொரு அறிவாகப் பெற்று வளர்ச்சியடைதலே பரிணாம வளர்ச்சியாகும். இந்தப் பரிணாம வளர்ச்சியின் நிறைவாக இருப்பவனே இன்றைய மனிதன் ஆவான். மனிதர்கள் தாம் பெற்ற அறிவினைக் கொண்டு, தம் வாழ்வின் நிலைகளை உயர்த்தி வந்திருக்கின்றனர். இத்தகைய அறிவின்

மேம்பட்ட நிலையே சிந்தனை ஆகும். சில சிந்தனைகள் மனிதர்களின் புற வாழ்வினை மேம்படுத்தவும், சில சிந்தனைகள் மனிதர்களின் அக வாழ்வினை மேம்படுத்தவும் உதவுகின்றன. இங்ஙனம் மேம்பட்ட சிந்தனைகளைத் தமது வாய்மொழியினாலும், எழுத்துகள் தோன்றிய பின்னர் தமது எழுத்துகளினாலும் வெளிப்படுத்தத் தொடங்கினர். இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டவையே இலக்கியங்கள் ஆகும். இன்றளவும் மனிதர்கள் தொடர்ந்து பலவகை இலக்கியங்களைப் படைத்து வருகின்றனர். அதிலும் மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியான தமிழில் பல அற இலக்கியங்கள் படைக்கப்பட்டன. அவை கூறும் கருத்துகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு தனி மனிதனும் தம் வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியன ஆகும். தமிழ் இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடும் போது சங்க இலக்கியங்களில் இருந்தே அதன் தொன்மையான வரலாறு தொடங்குகிறது. தொடங்கி இக்கால இலக்கியம் வரை வளர்ந்து, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஈடுகொடுத்து இன்று வரை தம் பெருமையை நிலைநாட்டி நிற்கிறது. படைப்பாளர்கள் பலர் இருந்த போதும், சிலர் மட்டுமே மக்களின் மனதில் நிலைத்து நிற்கின்றனர். அங்ஙனம் நிலைத்து நின்ற பல புலவர்களுள் ஔவையாரும் ஒருவர்.

**ஔவையார்**

ஔவை என்னும் சொல்லுக்கு வயதில் மூத்தவர் என்னும் பொருள் உண்டு. வயதில் மட்டுமல்ல அறிவிலும் மேம்பட்டவர் என்பது அவர் இயற்றிய பாடல்கள் வழி நாம் தெரிந்து கொள்ளலாம். சங்ககால இலக்கியங்களில் பாடல்கள் பல எழுதி, அரசன் முதல் ஆன்றோர் வரை பலர் போற்ற வாழ்ந்தவர் ஓர் ஔவையார். அடுத்து பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பன், புகழேந்து, ஒட்டக்கூத்தர் என்னும் பார் போற்றும் புலவர் பலர் வாழ்ந்த காலத்தில் டன் வாழ்ந்தவர் ஓர் ஔவையார். இவர் தனிப்பாடல்கள் பல எழுதியுள்ளார். இன்னும் ஓர் ஔவையோ குழந்தைகளுக்கான அறநெறிப் பாடல்கள் இயற்றியுள்ளார். இங்ஙனம் ஔவை என்னும் பெயர் தாங்கிப் படைக்கப்பட்ட நூல்கள் தமிழில் பல உள்ளன. தமிழ்ப்புலமையிலும், செறிவுமிக்க கருத்துகள் வழங்கியதிலும், ஔவையின் நூல்கள் இன்றும் காலத்தை வென்று மக்களின் மனதில் இருப்பதாலும், வள்ளுவன், இளங்கோ, பாரதி என்னும் தமிழ்ப்பெரும்புலவர்களின் வரிசையில் ஔவைக்கும் இடம் தரப்பட வேண்டும் என்ற நோக்கில் இந்த ஆய்வுக் கட்டுரையானது இயற்றப்பட்டிருக்கிறது. இக்கட்டுரை ஔவையாரின் தனிப்பாடல்களை மட்டும் கையாளுகிறது.

**தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்**

உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் வாழ்வாங்கு வாழ்வு வாழ்ந்து, நிறைவாக உலகை விட்டு நீங்க வேண்டும் என்பதே அவனெடுத்த பிறப்பின் நோக்கம் ஆகும். அவ்வாறு வாழ்வாங்கு

வாழ்வு வாழ அவனுக்கு அவனது சிந்தனைகளே வழிகாட்டுகின்றன. அதிலும் மனிதர்களுள் சிலர் சிந்தனையில் பெரிதும் உயர்ந்து, பல பண்பட்ட கருத்துகளைக் கூறிச் சென்றிருக்கின்றனர். சிலர் எழுதி வைத்திருக்கின்றனர். இங்ஙனம் இயற்றப்பட்ட நூல்கள் அறநெறி கூறும் இலக்கிய நூல்கள் எனப்படுகின்றன.

***'மனத்துக்கண் மாசிலன் ஆதல்',[1] 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்',[2] 'தீதும் நன்றும் பிறர் தர வாரா',[3] 'குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே '[4], 'உடம்பா டில்லாத மனைவிதோ ளின்னா '[5], 'நட்பு இல்வழிச் சேரல் நல்கூர்ந் தன்று ',[6] 'கல்வி கரையில கற்பவர் நாள்சில '[7]*** முதலான பல வாழ்வியல் சிந்தனைகள் நமது தமிழ் இலக்கியங்களில் முத்துகளாகக் கொட்டிக் கிடக்கின்றன. சிந்தனையில் மேம்பட்ட இவற்றைக் கசடறக் கற்றும், கற்றவற்றை வாழ்வில் கடைப்பிடித்தும் வாழ்ந்து வந்தால் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் மேம்படும்.

**ஔவையின் தனிப்பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள்:**

ஔவை என்னும் பெயர் சொன்னாலே ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும், மூதுரையும் நினைவுக்கு வரும். ஆனால் அதே சமயம் பல தனிப்பாடல்கள் இயற்றியும் மக்களின் சிந்தனைகளை ஔவையார் தூண்டியுள்ளார். ஒரு பண்பட்ட மனிதன் தன் வாழ்வு சிறப்புற வாழ்ந்தால் மட்டும் போதாது, பிறர் வாழ்வும் சிறப்புற தம்மால் இயன்றவற்றை செய்து உதவ வேண்டும்.

**ஈதல்**

ஒருவனுக்கு பொன்னும், பொருளும் சேர்வது அவனது முந்தைய பிறவிகளில் அவன் செய்த நல்வினைகளாக இருக்கும் என்பது முற்பிறவிகளில் நம்பிக்கை உள்ளோரின் எண்ணம். அங்ஙனம் சேரும் செல்வம் யாவும் அவனுக்கே உரியவை அல்ல. இரந்தோர் வந்து கேட்கும் போது அவற்றை தன்னால் இயன்றயளவு ஈதல் வேண்டும் என்ற கருத்தை

***'ஈட்டம் இவறி இசை வண்டா வாடவர்<br>தோற்றம் நிலக்குப் பொறை'***[8]

என்னும் குறள் மூலம் வள்ளுவர் வலியுறுத்துகிறார். அதாவது பிறருக்கு ஈவதினால் கிடைக்கும் புகழைப் பெறாத ஆடவரின் பிறப்பு இம்மண்ணிற்கு பாரமாகும். இதற்கு இவர்கள் பிறக்காமலேயே இருந்திருக்கலாம் என்கிறார். இதே கருத்தைத்தான் ஔவையாரும்

***'பாடல் பெறானேல் பலர்மெச்ச வாழானேல்***

*நாடறிய நன்மணங்கள் நாடானே – சேடன்*

*இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்*

*கவிந்தென் மலர்ந்தென்ன காண்.'* [9]

என்று பாடுகிறார். பிறாரல் பாடப்பெற்று, தம் ஈகைக்குணத்தால் பிறர் மெச்ச, நாடறிய வாழாதவன் இந்த பூவுலகில் மறைந்தால் என்ன, இருந்தால் என்ன என்று சாடுகிறார்.

**விருந்தோம்பல்**

வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நன்கு கவனித்து, அவர்கள் முகங் கோணாது நடந்து கொள்ளுதல் என்பது தமிழரின் வாழ்வியல் பண்புகளில் மிக இன்றியமையானது. இந்தப் பண்பு இல்லையென்றால், அனிச்சம் பூவினை விட மென்மையான விருந்தினரின் முகம் வாடி விடும் என்னும் கருத்தை கீழ்க்கண்ட குறள் மூலம் விளக்குகிறார் திருவள்ளுவர்.

*மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*

*நோக்கக் குழையும் விருந்து!*[10]

இதே கருத்தையொட்டி ஔவையும் ஒரு பாடல் பாடியுள்ளார்.

*'காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே*
*மாணொக்க வாய்திறக்க மாட்டாதே– வீணுக்கென்*
*என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ*
*அன்பில்லாள் இட்ட அமுது.'*[11]

தம் வீட்டிற்கு வந்த விருந்தினரை, மனதில் ஒரு சிறிதும் அன்பின்றி உணவளித்தால் அதை உண்பவர் உள்ளம் எத்துணை துன்புறும் என்பதை ஔவையாரின் இவ்வரிகள் நன்கு விளக்குகின்றன.

**செருக்கின்மை**

எஞ்ஞான்றும் ஒரே மனிதனால் எல்லாச் செயல்களையும் சிறப்புறச் செய்ய இயலாது. ஒவ்வொரு செயலும் ஒவ்வொருவருக்கு எளிதாக இருக்கும். ஆனால் மனிதர்களில் சிலர் தாமே சிறப்பானவர் என்றெண்ணி, செருக்குக் கொள்வர், பிறரை இகழ்வாகக் கருதுவர். அப்படி வாழாமல், எல்லோரும் ஏதோ ஒரு வகையில் சிறப்புற்றவரே என்ற எண்ணங் கொண்டு, செருக்கற்று வாழ்தலே சிறந்த வாழ்வியல் பண்பு என்பதனை பின்வரும் பாடல் மூலம் சிறப்பாக விளக்குகிறார்.

*'வான்குருவி யன்கூடு வல்லரக்குத் தொல்கறையான்*

*தேன்சிலம்பி யாவருக்குஞ் செய்யரிதால்– யாம் பெரிதும்*

*வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்*
*எல்லோருக்கும் ஒவ்வொன் றெளிது.’*[12]

அதாவது தூக்கணாங்குருவியின் கூடும், உறுதியான அரக்கும் தொன்மையும் கொண்ட கரையான் புற்றும், தேன் கூடும், சிலந்தியின் வலையும் நம்மில் யாவருக்கும் செய்ய அரியனவே. அதனால் ‘நானே பெரியவன், எனக்கே எல்லாம் செய்யக்கூடிய திறன் உண்டு ’ என எவரும் செருக்கு கொள்ள வேண்டாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிதாகும்.

இதே கருத்தை இன்னும் வலியுறுத்திக் கூறும் வண்ணம் இன்னுமொரு பாடலும் பாடுகிறார்.

*‘ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்*
*வாலை நிமிர்த்த வசமாமோ– நீலநிறக்*
*காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா*
*மூர்க்கனைச் சீராக்க லாமோ?*[13]

சில இயற்கையான எளிய செயல்களை மனிதர்களால் எங்ஙனம் செய்ய இயலாதோ, அதுபோல செருக்கு மிக்க மூர்க்க மனிதர்களை சீராக்குதல் என்பதும் இயலாது என்கிறார்.

**கல்வியின் பயன்**

*‘கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக’* [114]

என்கிறது குறள். கசடறக் கல்வி கற்றாலும், நற்பண்புடன் வாழ்தலே அக்கல்வியைக் கற்றதன் பயன் என்று ஔவையும் அழுத்தமாக உரைக்கிறார். மேலும் எல்லோருக்கும் கற்றலும், எழுதுதலும் எளிதாக கிட்டும் வாய்ப்பல்ல. அங்ஙனம் கிடைக்கும் வாய்ப்பினைக் கொண்டு கசடறக் கற்று, அதன்படி ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை ஔவையும் வலியுறுத்துகிறார்.

*‘எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்*
*பழுதறவா சிப்பரிது பண்பாய்– முழுதுமதைக்*
*கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்*
*நிற்பரிது தானந் தலை.’*[15]

*‘எழுதுதல் அரிது. முன்னம் எழுதியவற்றை பழுதற வாசித்தல் அரிது. வாசித்தாலும் பண்புடன் அதனை முற்றவும் கற்றல் அரிது. கற்றாலும் நற்பயனைக் காணுதல் அரிது. அதனைக் கண்டுவிட்டாலும் அதன் வழி நிற்றல் மிகவும் அரிதாகும்* ’ என்பதே இதன் பொருள். கல்வி கற்றலை எவ்வளவுக்கு எவ்வளவு இன்றியமை என்று கூறுகின்றோமோ, அவ்வளவு இன்றியமை அதன்வழி நடத்தல் என்பது.

**மனிதருள் மூவகை**

வாழும் வாழ்வில் ஒருவருக்கொருவர் நன்மை செய்து வாழ வேண்டும். ஆனால் இந்த எண்ணம் பலருக்கும் வருவதில்லை. ஔவையார் மனிதர்களை மூன்று வகைப்படுத்துகிறார். சிலர் மிக உயர்ந்தவர்கள்; அவர்கள் பிறருக்கு என்ன தேவையோ அவற்றை அவர் கேளாமலே செய்வராம். தாம் செய்தவற்றை மற்றவரிடம் சொல்லி அதன் மூலம் புகழ் தேட மாட்டார்கள். இன்னுஞ் சிலரோ வேண்டுபவர் கெஞ்சிக் கேட்டபின், உதவிகள் செய்வார்கள்; அதே நேரம் செய்த உதவியை எல்லோரிடமும் சொல்லிப் பெருமிதம் கொள்வராம். இன்னுஞ் சிலரோ செய்வோம், செய்வோம் எனக்கூறிக் கொண்டே இருப்பர். ஆனால் ஒருபோதும் எவ்வித உதவியும் செய்ய மாட்டார்களாம். இவர்கள் மூவரையும் முறையே *பூக்காமலே பயன்தரும் பலாமரம், பூத்தபின் பழந்தரும் மாமரம், பூத்தாலும், காய்த்தாலும் பழம் தராத பாதிரி* இவற்றை ஒப்புமைப்படுத்தி, மனிதர்கள் மூவகை என்று கூறுகிறார்.

***‘சொல்லாமலே பெரியர் சொல்லிச்செய் வர்சிறியர்***
***சொல்லியுஞ் செய்யார் கயவரே– நல்ல***
***குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடில்***
***பலாமாவைப் பாதிரியைப்பார்’.***[16]

**முடிவுரை**

இங்ஙனம் மனிதனின் மேம்பட்ட வாழ்விற்குத் தேவையான பல சிந்தனைகளை தம் எழுத்தின் மூலம் மக்களிடம் சேர்ப்பித்தவர் ஔவையார். அவர் நீதிநூல் வெண்பாக்களைத் தவிர, நூற்றுக்கும் அதிகமான தனிப்பாடல்கள் எழுதியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும், ஒவ்வொரு வகையான அறக்கருத்தினை மிக எளிதாக மக்களுக்குப் புரியும் வகையில், இயற்றியுள்ளார். அவர் நேரிலே கண்ட காட்சிகளும், மக்களின் வாழ்வியலும் இதன் மூலம் நமக்குத் தெரிய வருகின்றன. ஒரு நாடோடி வாழ்வு வாழ்ந்து, எளிய மக்களைக் கண்டு, அவர்கள் வாழ்க்கைத் தரம் இன்னும் மெருகுபெறவும், அவர்கள் அறியாது செய்த தவற்றினைச் சுட்டிக்காட்டி, அதனை அவர்கள் உணர்ந்து திருந்தும்படியும், மனிதர்கள் ஒருவருக்கொருவர் நன்மை செய்து வாழும் வாழ்வினை வலியுறுத்தியும் பல பாடல்கள் இயற்றியுள்ளார். அறக் கருத்துகள் மட்டுமல்லாது ஔவையாரின் தனிப்பாடல்களில் தமிழ்ச்சுவையும், பொருட்சுவையும் மிகுதி என்பதும் தெளிவுற விளங்குகிறது.

**அடிக்குறிப்பு பட்டியல்**

1. திருக்குறள் எண்–34, அதிகாரம்–அறன்வலியுறுத்தல், பால்–அறத்துப்பால்.

2. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்.
3. புறநானூறு -192, கணியன் பூங்குன்றனார்.
4. இனியவை நாற்பது, பாடல் 12, பூதந்சேந்தனார்.
5. இன்னா நாற்பது, பாடல் 11, கபிலர்.
6. முதுமொழிக்காஞ்சி, நல்கூர்ந்த பத்து(9), பாடல் 10, மதுரைக் கூடலூர் கிழார்.
7. நாலடியார், கல்வி, பாடல் 135, சமண முனிவர்கள்.
8. திருக்குறள் எண்–1003, அதிகாரம்–நன்றியில் செல்வம், பால்–பொருட்பால்.
9. ஔவையார் தனிப்பாடல்கள், புலியூர்க் கேசிகன், பக்கம் 58, 8ம் பதிப்பு, 2020, சாரதா பதிப்பகம்.
10. திருக்குறள் எண்–90, அதிகாரம்–விருந்தோம்பல், பால்–அறத்துப்பால்.
11. ஔவையார் தனிப்பாடல்கள், புலியூர்க் கேசிகன், பக்கம் 24, 8ம் பதிப்பு, 2020, சாரதா பதிப்பகம்.
12. மேலது, பக்கம் 10.
13. மேலது, பக்கம் 90.
14. திருக்குறள் எண்–390, அதிகாரம்–கல்வி, பால்–பொருட்பால்.
15. ஔவையார் தனிப்பாடல்கள், புலியூர்க் கேசிகன், பக்கம் 118, 8ம் பதிப்பு, 2020, சாரதா பதிப்பகம்.
16. மேலது, பக்கம் 49.